04.10.2023
O.S.No.29/2014

வா.சா.1.திருமதி.மகேஸ்வரி க.பெ.பாஸ்கரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு 1 மற்றும் 3ம் பிரதிவாதிகளை தாவாசொத்தில் குடியிருக்க விடாமல் நான் தாக்கினேன் என்று, எனக்கு எதிராக கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் 22.02.2014 அன்று முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.64/2014ன் கீழ் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் நான் பெற்ற இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்து பிரதிவாதிக்கு ஆதரவாக முடிவாகி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு பிரதிவாதி கேவியட் மனு எண்.138/2012 தாக்கல்செய்திருந்தார் என்றாலும், அது காலாவதியான பின்பும் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. எங்களது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் மூவரும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தாவாசொத்தை ஆவணங்களை சரிபார்த்துதான் நான் கிரயம் வாங்கினேன்.

2.1986ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணம் ஒன்று நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த ஆவணம் 03.12.1986ல் பத்திரம் வாங்கப்பட்டதாகவும், 05.09.1986ல் பத்திரம் எழுதப்பட்டதாகவும், முன்னுக்கு பின் முரணாக காணப்படுகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் முன் பாத்தியதாரர்கள் அனைவரும் கருங்காலக்குடியை சார்ந்தவர்கள் என்றாலும் வா.சா.ஆ-3 ஆவணத்தின் முத்திரைதாள் கந்தர்வக்கோட்டையில் வாங்கப்பட்டது என்றாலும் எனக்கு தெரியவில்லை, ஆனால் எங்களது முன்பாத்தியஸ்தர்கள் கருங்காலக்குடியைச் சார்ந்தவர்கள்தான். வா.சா.ஆ-3 ஆவணத்தின் முத்திரைதாள் கருங்காலக்குடியைச் சேர்ந்த அரபுசார் ராவுத்தர் என்பவர் பெயரில் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் அவர் அந்த தேதியில் உயிருடன் இல்லை என்றால் அவரை பற்றி எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ-3 ஆவணத்தில் பாகபிரிவினை 8 நபர்களுக்கிடையே ஏற்பட்டிருக்க வேண்டும் என்றாலும் 4 நபர்களை கொண்டு மேற்படி பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. ரசியா பேகத்தின் பெயரில் பட்டா மாறியுள்ளதால் அவரிடம் இருந்து நான் கிரயம் வாங்கினேன். பொது குடும்ப சொத்தை பொறுத்து அப்பாஸ் என்பவருக்கு சில சொத்துக்களை பிரித்து கொடுத்தாக வா.சா.ஆ-3 ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் அவர் அவ்வாறு சம்மதம் கொடுத்தாக எந்த குறிப்புகளும் காணப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. அதே போல் மும்தாஜ் பீவி மற்றும் மின்னல் பீவீ, சுலைஹா பீவி ஆகியோர்கள் மேற்படி குடும்ப சொத்துக்களில் தங்களுக்கு உள்ள பாத்தியத்தை விட்டுக்கொடுத்ததாக வா.சா.ஆ-3 ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-3 பத்திரத்தில் உள்ள பயனாளிகளில் ஒருவரான தாஜுதின்

என்பவர் மேற்படி பத்திரம் எழுதியதை மறைத்து போலியானது  என கூறி எனக்கு ஒரு அறிவிப்பும் அனுப்பி மதுரை மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியரிடமும் அவரது மனைவி மூலம் புகார் மனு கொடுத்து தற்போது விசாரணையில் உள்ளது என்றால் சரியல்ல, எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. நான் அந்த விசாரணைக்கு ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை சீனி ராவுத்தர், கருப்பையா என்பவருக்கு தானமாக கொடுத்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-3 ஆவணத்தில் குடும்ப உறுப்பினர்களின் முழுமையான விவரம் எதுவும் அதில் காணப்படவில்லை என்றாலும், அந்த ஆவணம் செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)